Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 | தேசிய தினசரி | மணி 13
போன் 389 | இதழ் 98

யாழ்ப்பாணம் வைகாசி 7 சபி:துல் 25 வெள்ளிக்கிழமை (21-5-71)

இடமாற்றம்

53, பிரதான வீதியில் இருந்த
'கொழும்பு ஒப்ரிக்கல்'
என்னும் பெயருடைய உங்கள் அபிமான மூக்குக்கண்ணாடி ஸ்தாபனம், தற்போது 95, ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அருகாமையில் மாற்றியுள்ளோம் என்பதை தெரிவிக்கின்றோம்.

கொழும்புஒப்ரிக்கல்
95, ஸ்ரான்லி றேட்- யாழ்ப்பாணம்

# சகல பாடசாலைகளும் ஜூன் 2ல் ஆரம்பம்

## மந்திரி சபை முடிவு

கொழும்பு, வியாழன்

சகல அரசாங்க பாடசாலைகளும் அடுத்த தவணைக்காக ஜூன் மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகும். இன்று கூடிய மந்திரிசபை இந்த முடிவை எடுத்தது.

வாரத்தில் ஆறு நாட்களுக்குப் பாடசாலைகளை நடாத்துவதென்றும் மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

கொழும்பு பேராதனை பல்கலைக்கழக பொறியியல் மருத்துவத்துறை பிரிவுகளும் அடுத்தமாதம் 2-ம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக்கல்லூரி உட்பட நாட்டிலுள்ள சகலதொழில் நுட்பக் கல்லூரிகளும் அடுத்தமாதம் 2-ம் திகதி ஆரம்பமாகுமென்றும் அதே தினத்திலேயே ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளும் ஆரம்பமாகுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 22-ம் திகதி முதல் அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டியதில்லையென்றும் ஜூன் 2-ம் திகதி பாடசாலை ஆரம்பமாகும்போது ஆசிரியர்கள் பிரசன்னமாயிருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ்ப்பிள்ளைகளுக்கு சிங்களம் அவசியமில்லை

## அரசியல் நிர்ணய சபையில் எஸ். ஜே. வி. வற்புறுத்து

கொழும்பு, வியாழன்

"ஆங்கிலம் போதனா மொழியாக்கப்படுவதை அரசாங்கம் எதிர்க்கிறது. அப்படியானால் தமிழ்ப் பிள்ளைகளுக்கு மட்டும் சிங்களம் ஏன் அவசியம்? வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களம் கற்பிக்கப்படவேண்டிய அவசியமில்லை. இந்தப் பகுதிகளில் சிங்களம் கற்பிக்கப்பட்டால் சிங்களமே போதனா மொழியாகிவிடும். இதனால்தான் தமிழ்ப்பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிப்பதை எதிர்க்கிறோம்."

இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று அரசியல் நிர்ணயசபையில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "தமிழ் மக்களுக்கு அவர்களுடைய மொழி மிகவும் முக்கியமானது. அரசாங்கத்துடன் சமாதானமாகவே தமிழ்மக்களின் மொழிப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கத் தமிழரசுக்கட்சி விரும்புகிறது. தாய்மொழியே போதனா மொழி என்பதனை முந்திய அரசு ஏற்றுக்கொண்டது. வீட்டில் பேசும் மொழியே போதனாமொழி என்கின்ற புதிய வியாக்கியானத்தை அவர்கள் வேறு அப்போது கூறினார்கள். தமிழ் மக்கள் சிலருடைய வீடுகளில் சிங்கள மொழியிலேயே பேசுவதாகவும் சொன்னார்கள். எம்மைப் பொறுத்தவரையில் தாய்மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டும்."

## 'கஷ்டங்கள் தீர...'

அளவெட்டி, வியாழன்

"இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் நீங்கி மக்கள் நல்வாழ்வு வாழ நாம் கோளாறு பதிகம் பாடவேண்டும்" நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் கோளாறு பதிக பாராயணத்தை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஞானசம்பந்தப் பெருமான் அருளிய கோளாறு பதிகத்தை நாம் தினமும் படிப்பதனால் சகல கஷ்டங்களும் நீங்கும் எனவும் மேற்படி பதிகத்தினால் பெறும் நன்மைகள் மற்றும் வழிபாடுகள் மூலம் இறைவனிடம் பெறும் நன்மைகளை விட அதிகமானவை" என்றும் சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் கூறினார். தினமும் காலையில் நல்லைக் கந்தன் வீதிகளில் கோளாறுபதிகப் பஜனைகள் நடைபெற்று வருகின்றன.

புனர்வாழ்வுத் திட்டம்:

# கைத்தொழில், விவசாய துறையில் ஈடுபடுத்தப்படுவர்

கோட்டை, வியாழன்

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளவர்களில் நேரடியாக பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபடாதவர்கள் கைத்தொழில் விவசாயத்துறைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

புனர்வாழ்வுத் திட்டங்களின்கீழ் இந்த நடவடிக்கைகள் புனர்வாழ்வு, புனர்நிர்மாணக் குழுவினால் செய்யப்பட்டுவருகிறது.

தனித்தனியான புலன் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர், சிறு சிறு குழுக்களாக முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள் பல்வேறு மாகாணங்களுக்கும் அனுப்பப்பட்டு அங்கு பல்வேறு துறைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மாவட்ட ரீதியிலான புனர்வாழ்வுதிட்டத்தின்கீழ் உள் அடக்கப்படுவார்கள். இதற்கான விரிவான திட்டங்களை புனர்வாழ்வுக்குழுதயாரித்து வருகிறது.

ஊரடங்கு நேரம்
இன்று மாலை 7-30 முதல்
நாளை காலை 4-30 வரை

# இலங்கைக்கு இந்திய உதவி ரூபா 5 கோடி

புதுடில்லி, வியா

இலங்கைக்கு இந்திய அரசு அளிக்கும் இராணுவ உதவியின் மொத்தத் தொகை 5 கோடி ரூபாவாகும்.

இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் திரு. வை. கே. புரியின் ஆலோசனையின் பேரில் இந்திய அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அறியப்படுகிறது: இலங்கையைச் சுற்றி இந்திய கடற்படை கடந்த ஒருமாதமாக காவல்புரிந்து வருகிறது. இந்த நடவடிக்கையில் 2500 அதிகாரிகளும் ஆட்களும் ஈடுபட்டுள்ளனர், அரசாங்கப் பாதுகாப்புப் படைகளுக்கு அத்தியாவசிய உதவிகளை ஹெலிகொப்டர்கள் செய்து வந்தன என தெரியவருகிறது.

## 'பிராவ்டா' கருத்து

மாஸ்கோ, மே 20

ஏப்பிரலில் தொடங்கிய தீவிரவாதிகளின் இயக்கத்தினால் இலங்கையில் வலதுசாரிகளின் சக்திபலம் பெறுவதாக சோவியத் பத்திரிகையான பிராவ்டா எழுதியுள்ளது.

கிழக்குப் பாக். அகதிகளுக்கு

# ரூ. 200 கோடி தேவை!

புதுடில்லி, மே 20

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து பாரதத்துக்குக் குடிபெயர்ந்து வந்துள்ள சுமார் 28 லட்சம் அகதிகளுக்கும் அடுத்த 6 மாத காலத்துக்கு நிவாரணமாக 200 கோடி ரூபாய் தேவைப்படுவதாக ஐ நா விடம் கேட்கப்பட்டுள்ளது அகதிகள் பற்றி ஆராய இந்தியாவுக்கு வந்த தூதுக்குழுவின் தலைவர் சார்ல்ஸ் மீஸ் முகாம்களைப் பார்வையிட்ட பின்னர் இந்தத் தொகை தேவைப்படுமென்று ஐ.நா. விடம் தெரிவித்துள்ளார்.

ஆறு மாத காலத்துக்குள் இவர்கள் திரும்பிவிடலாம் என்பதை உறுதியாகத் தெரிவிக்கமுடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

5வது அடிப்படைத் தீர்மானம்:

# ஜே. ஆர். திருத்தம் தோல்வி

கோட்டை, வியாழன்

புதிய அரசியலமைப்புச் சம்பந்தமாக ஐந்தாவது அடிப்படைத் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்வதற்காகத் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஒரு திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்தார் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, திரு. டட்லி சேனநாயகா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் இந்தப் பிரேரணையில் கையெழுத்திட்டிருந்தார்கள்.

எந்த ஒரு நபரின் உடைமைகளும் சட்டரீதியாக அன்றிச் சுவீகரிக்கப்படக் கூடாது என்பதே இவர்கள் கொண்டுவந்த திருத்தப் பிரேரணையாகும்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசுகையில், பொதுத் தேவைக்காக மட்டும் உடைமைகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென்றும், அப்படிச் சுவீகரிக்கப்பட்ட உடைமைகளுக்குத் தகுந்த நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

இந்தத் திருத்தப் பிரேரணை தோல்வியடைந்தது

# 'வெங்காயம்கொண்டுசெல்ல தடை இருக்கக்கூடாது'

## —செனட்டர் நடராசா

கொழும்பு, வியா.

"கொழும்பு போன்ற இலபகுதிகளில் சின்ன வெங்காயத்துக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகிற அதேவேளையில் வடபகுதியில் விற்பனையில்லாமல் பெருந்தொகையான சின்னவெங்காயம் தேங்கிக்கிடக்கிறது. இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கு பெருத்தநஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் வெங்காயத்தை நாட்டின் சகலபகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு இருக்கும் தடையை நீக்கவேண்டும்"

இவ்வாறு செனட் சபையில் செனட்டர் எஸ். நடராசா பேசுகையில் இன்று கேட்டுக்கொண்டார்.

செனட்டர் நடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடபகுதி விவசாயிகளின் வெங்காயச் செய்கை 6 மாத

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பந்து கிரிக்கெட்

## அரியாலை 'யூத்ஸ்' சாம்பியன்

யாழ்ப்பாணம், வெள்ளி
அரியாலை மேற்கு சனசமூக நிலையத்தின் 52-வது சுதேசிய விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட தொடர்வுப் போட்டியில் அரியாலை "யூத்ஸ்' கழகம் சாம்பியனாக வந்துள்ளது.

அரியாலை "யூத்ஸ்' கழகத்துக்கும், சுண்டிக்குழி 'வில்லியன்ஸ்' கழகத்துக்குமிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அரியாலையூத்ஸ் கழகம் 3 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (தே வி)

## வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், புதன்
ரெக்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், திருக்குடும்ப சனசமூக நிலையத்திற்கும் இடையே செனட் பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமமாக முடிவுற்றது.

இப் போட்டிக்கு திரு. செல்வநாயகமும் திரு. மகேந்திரனும் மத்தியஸ்தம் வகித்தனர்.

## 'சைவர்களுக்கு தீட்சை அவசியம்'

யாழ்ப்பாணம், வெள்ளி
'சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் சமயதீட்சை பெற்று சமய நெறிகளையும் விதிகளையும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்' என்று கிரியா வித்தகர் சிவத்திரு க. வைபாதசுந்தரக்குருக்கள் மீசாலை கருமபிமாவடி கந்தசாமிகோயிலில் பிள்ளைகளுக்கு சமயதீட்சை அளிக்கையில் கூறினர். 50 பிள்ளைகளுக்கு அவர் சமயதீட்சை அளித்தார்.

ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் நித்திய கருமவிதிநூல் வழங்கப்பட்டது. (கு.வி.ம)

## வதிரி அம்பாள் வெற்றி

பருத்தித்துறை, வியாழன்
வதிரி அம்பாள் சரபந்தாட்டக் கோஷ்டிக்கும், தெல்லிபடிப் பட்டினசபைக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான சரபந்தாட்டப் போட்டியில் அம்பாள் கோஷ்டி 2.1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

## வலி-கிழக்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம் நீர்வேலி

### ஏல விற்பனை

மேற்படி சமாசக் கந்தோரில் 25-5-71 செவ்வாய்க்கிழமை மு. ப 10-00 மணியளவில் கீழ்க்காணும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

1. இசுசு லொறியின் பழுதான யந்திர உதிரிப் பாகங்கள்.
2. பெற்ரோல் (சவலெற்) லொறியின் பழுதான யந்திர உதிரிப்பாகங்கள்.
3. பாவிக்கக் கூடிய 7.50X20 பழைய ரயர்கள்.
4. பழைய பல்லை, நிலை,
5. ரயர், லொறி றிம், போத்தல்கள் முதலியன.

இவைகளைப் பார்வையிட விரும்புவோர் சமாச வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

க. வீ. கனகசபாபதி,
3295 தலைவர்.

THE JAFFNA ACADEMY,
Chundikuli.
Phone No. 617
The Jaffna Academy re-opens on Tuesday 25th May 1971. Please apply for admissions immediately.
3296 Director

## 'யுரேனஸ்' வெற்றி

உடுப்பிட்டி, வியா.
கரணவாய் தெற்கு யுரேனஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், வதிரி மனோகரா விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் மோதலில் யுரேனஸ் கழகம் முதல் ஆட்டத்தில் 60 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 53 ஓட்டங்களையும், மனோகரா கழகம் முதல் ஆட்டத்தில் 23 ஓட்டங்களையும், இரண்டாம் ஆட்டத்தில் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

சற்றில் யுரேனஸ் கோஷ்டியினர் 80 ஓட்டங்களை மேலதிகமாக எடுத்து மனோகரா கோஷ்டியினரை வெற்றியீட்டினர்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி
கொழும்பு தெமட்டகொடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு. அ. நாகராசா இம்மாதம் 15-ம் திகதிதொடக்கம் மீசாலை விக்கினேசுவர வித்தியாலயத்துக்கு அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

0 0 0

பரந்தன் இரசாயன தொழிற்சாலை உதவி நிர்வாக அதிபராகக் கடமையாற்றிய திரு. ஏ. பீ. சச்சிதானந்தம் கொழும்பு இரசாயன கூட்டுத்தாபனத்துக்கு பதவியுயர்வு பெற்று இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளார். (கு வி ம)

## வரி விளம்பரம்

### தேவை

விவசாய-இரசாயனக் கலவைகள். இயந்திர - உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை வவுனியா, மன்னார் மாவட்டப் பிரிவுகட்கு வான் மூலம் விநியோகிக்க பிரதிநிதி ஒருவர் தேவை. பிணைப்பணம்: 5000/- ரூபாவுடன் இருவர் உறுதிப்படுத்தல் வேண்டும். மாதச் சம்பளம் 150/- கமிஷன் உட்பட மாத வருமானம் சுமார் 600/-க்கு மேற்படலாம். அனுபவமுள்ள அப்பகுதி விண்ணப்பதாரிகள் விரும்பப்படுவர். ஓட் டோஸ்லிமிற்றட், யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும் 3118

ஆங்கில வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் அற்றெண்டன் தேவை. (இளைப்பாறியவர் விரும்பத்தக்கது) பகல் வேலை மட்டும். விபரங்களுக்கு: Dr. R. சோமசுந்தரம், மத்திய வைத்திய நிலையம், நெல்லியடி, கரவெட்டி. 2479

### விற்பனைக்கு

புதுமைலோலன் எழுதிய குறுநாவல், 'கருகிய ரோஜா' இரண்டாம் பதிப்பு விற்பனையாகின்றது. விலை 50 சதம் மட்டுமே. 50 சத தபாற் றலையனுப்பினுல் அனுப்பும் செலவு இலவசமாகும். அன்பு புத்தகசாலை, 27, டி. பெரியகடை, யாழ்ப்பாணம். 3111

### திருமண அழைப்பு

1971-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி புதன்கிழமை எமது புத்திரன் திருநிறை செல்வன் செபஸ்தியாம்பிள்ளைக்கும், எமது புத்திரி திருநிறைசெல்வி மேரி ஜோசப்பினுக்கும் நாரந்தனை இருதய ஆண்டவர் தேவாலயத்தில் நடைபெறும் திருமணத்திலும் மாலை மணமகள் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பிலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். பே. அந்தோனியும் பாரியாரும் (மணமகன் பெற்றோர்) ப. கஸ்பாரும் பாரியாரும் (மணமகள் பெற்றோர்) நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை. 3117

## புனர்நிர்மாண வேலைகள் துரிதமடைகின்றன

கோட்டை, வியாழன்
நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சின் புனர்நிர்மாணவேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வமைச்சு 105 பிராந்திய பிரிவுகளை அமைத்துள்ளது. 9 பிரதேச நிர்வாகிகள் இப்பிராந்திய பிரிவுகளின் நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றனர். இவர்கள் தினமும் இப்பிரிவினரின் நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகள் தயாரித்து அமைச்சுக்கு அனுப்புகின்றனர் என அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சாணி அபிவிருத்தி நீர்ப்பாசன வேலைகளிலும் அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அமைச்சின் பாலம் அமைக்கும் பிரிவு தற்போது நாட்டில் பழுதடைந்துள்ள பாலங்கள் யாவற்றையும் திருத்தி அமைப்பதில் ஈடுபட்டுள்ளது. ஆபத்தான சூழ்நிலையிலும் இப்பிரிவினர் கடமை உணர்ச்சியோடு வெகுதுரிதமாக புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என மேற்படி அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.


RAJAH — JAFFNA
Daily: 10-30a.m. 1-30&4-00p.m.
Anthony Quinn and Tonny Bill
in
THE LAST WARRIOR
(Scope&Color-form)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 200 மணி
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்கராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

லிங்கி
காலை 10, பி.ப.2-00 மணி
அன்பே வா

மைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
எதிரிகள் ஜாக்கிரதை

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(வர்ணச் சித்திரம்)

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
Daily 10-30 A. M. only
CHINESE ADVENTURE in CHINA
2-30 மட்டும்
பூவா தலையா

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a m
Christopher George
in
PROJECT X
(Techni-Color)
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர்-கே ஆர். விஜயா நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி.ப.1-30
சிவாஜிகணேசன்-K.R.விஜயா
நாகேஸ்
நடித்த
திருடன்

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2 & 4-15 p. m.
Dean Martin
Ann Margret
in
MURDERERS ROW
(color-Spy film)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
நேர்வழி

வின்ஸர்-யாழ்ப்பாணம் (இன்றுமட்டும்) வாராஜாவா
22-5-71 முதல் மகத்தான ஆரம்பம்
காலை 10-30 பி. ப. 2-00
சிவாஜி கணேசன், ★ பத்மினி, ★ ஜெயலலிதா
★ நம்பியார் சுந்தரராஜன் ★ தங்கவேலு ★ மனோரமா
நடித்த
குருதட்சணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளின் நிவாரணத்துக்காக

# பெருமளவில் இந்தியாவுக்கு உதவ யூதாண்ட் கோரிக்கை

## உடனடியாக அமெரிக்கா 5லட்சம்டாலர்உதவிவழங்குகிறது

நியூயோர்க், மே.20

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கு நிவாரணவசதிகள் செய்து கொடுப்பதற்காக இந்தியாவுக்கு பெருமளவில் உதவி புரியும்படி அங்கத்துவ நாடுகளை ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

யுதாண்ட்டின் வேண்டுகோளைத் தொடர்ந்து அமெரிக்கா மேலும் 5 லட்சம் டாலர் பெறுமதியான உதவிகளை இந்த அகதிகளுக்காக வழங்குவதற்கு முடிவு செய்திருக்கின்றது.

கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து சுமார் 25 லட்சம் பேர் இந்தியாவுக்குள் அண்மையில் அகதிகளாக வந்து சேர்ந்துள்ளார்கள். இவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது பெரும் கஷ்டமான காரியம் என்று இந்தியா அறிவித்திருந்தது. சர்வதேச உதவிகள் கிடைப்பதில் ஏற்பட்டுவரும் தாமதம் குறித்து இந்திய பிரதமர் கவலைதெரிவித்திருந்தார். அகதிகள் நிலைமை பற்றி ஐ.நா. ஹைகமிஷனர் நேரில் நடத்திய ஆய்வுகளின் பின்னர் அறிக்கை யொன்றினை யுதாண்டிடம் சமர்ப்பித்திருந்தார். இந்த அறிக்கையின் அடிப்படையில் யுதாண்ட் இப்பொழுது அங்கத்துவ நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பாரதமதிப்பீட்டின்படி இந்த அகதிகளுக்கு சுமார் 17 1/2 கோடி டாலர் உதவி தேவைப்படலாம் என்று தெரிகிறதென்றும் சில நாடுகள் ஏற்கனவே தம்மாலான உதவிகளை வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள பொதுச் செயலாளர் யுதாண்ட் இந்த அகதிகளின் நிவாரணத்துக்கென பெருமளவில் உடனடியாக உதவிகள் புரியும்படி அங்கத்துவ நாடுகளைக் கேட்டுக்கொண்டார்.

யுதாண்ட் இவ்வாறு வேண்டுகோள் ஒன்றினை விடுப்பதைத் தடுப்பதற்கு பாகிஸ்தான் பெருமுயற்சி எடுத்ததாகவும் ஆனால் அது பயனளிக்கவில்லையென்றும் சில வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்பட்டது. ஐ.நா சபைவழங்கும் உதவிகளை ஏற்பதாக பாகிஸ்தான் இப்பொழுது அறிவித்துள்ளது. யுதாண்ட் அளிக்க முன்வந்த உதவிகளை முன்பு பாகிஸ்தான் மறுத்துவந்தது தெரிந்ததே.

### யு.எஸ்.உதவி

இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்கும்வகையில் மேலும் 5 லட்சம் டாலர் உதவிகளை வழங்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. யுதாண்ட் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அமெரிக்கா இந்த முடிவைச்செய்திருக்கிறது. ஏற்கனவே சுமார் 25 லட்சம் டாலர் பெறுமதியான உதவிகளை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகள் மீண்டும் கிழக்குப் பாகிஸ்தானுக்குத் திரும்பிப்போக வழிசெய்ய வேண்டுமென்ற யுதாண்டின் கருத்தை அமெரிக்கா ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. ஐ.நா. மேற்பார்வையில் இந்த அகதிகளுக்கு அமெரிக்கா உதவிபுரியத் தயாராய் இருப்பதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

......

### பண விநியோகம் அதிகரிப்பு

கோட்டை, வியா

மத்தியவங்கி இவ்வருடம் முதல் இரண்டு மாதங்களிலும் பணவிநியோகத்தை சுமார் 55 லட்சத்தால் அதிகரித்துள்ளது. கடந்த வருடம் இதேகாலத்தில் 9 லட்சம் மட்டுமே அதிகரித்திருந்தது என்று இவ்வருடம் மார்ச் மாதம் வெளியான புள்ளிவிபரம் கூறுகிறது

## 'நிலுவைப் பணத்தைச் செலுத்தி ஒத்துழையுங்கள்'

### யாழ். மேயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு அவசியம் பணம் தேவையென்றும் அதனால் நிலுவையாகவுள்ள பணத்தைத் தவணை முறையிலாவது செலுத்தும்படி யாழ்.மேயர் வரியிறுப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

யாழ். மாநகரசபையில் பெரும் நிதிநெருக்கடியிருப்பதாகவும் இந்த நிலையில் எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் செய்யமுடியாமலிருப்பதாகவும் வரியிறுப்பாளர்களின் ஒத்துழைப்புத் தேவை என்றும் மேயர் தெரிவித்தார்.

மின்சாரவரி சோலைவரி மற்றும் பலதரப்பட்ட வரிகளை சபைக்குச் செலுத்த வேண்டியவர்கள். தவணை முறையில் அவற்றைச் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் மேயர் தெரிவித்தார்

சபையிடமிருந்து ஏதாவது பணம் வருமதியானவர்கள் அது சம்பந்தமாக உடனடியாக மேயருக்கு அறிவிக்கும்படி கேட்டுள்ளனர்.

— —

### அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கோட்டை, வியா

பயங்கரவாதிகளின் தாக்குதலால் அரசாங்க, தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் நஷ்டங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர்களை அரசாங்கம் கேட்டுள்ளது.

பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்காவின் உத்தரவின்பேரில் உள்நாட்டு, வெளிநாட்டு, உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

## ஐ. நா. சபையை புனரமைப்பு செய்யவேண்டும்

### சீனப் பிரதமர் சூ-என்-லாய் கருத்து

ஹொங்கொங், மே. 20

உலக நிறுவனமாகிய ஐ. நா. சபையைப் புனரமைப்புச் செய்யவேண்டும் எனச் சீனப்பிரதமர் சூ-என்-லாய் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன் பத்திரிகையாளர் குழுவொன்றுடன் உரையாடுகையில் மேற்படி கருத்தைபிரதமர் சூ-என்-லாய் வெளியிட்டுள்ளார்.

பிலிப்பைனிலிருந்து சென்ற வர்த்தக தூதுக்குழுவொன்றுடன் மேற்படி பத்திரிகையாளர் கோஷ்டியும் சென்றது.

மேலும் அவர் தொடர்ந்து ஐ. நா. பற்றிக் கூறியதாவது:- 'ஐ. நா சபையில் இருந்து தேசிய சீனா விலக்கப்பட்டாலன்றி சீனா ஒருபொழுதும் ஐ. நா. வில் அங்கத்துவம் வகிக்கமாட்டாது. இரு சீனாவுக்கும் தனித்தனி அங்கத்துவம் வழங்குவதென்னும் கேள்வி எழக் கூடாது. தைவான் பிரச்சினை தீர்ந்தாலன்றி ஐ. நா. வில் அங்கத்துவம் வகிப்பது குறித்து சீனா சிந்திக்காது.

எனவே ஐ. நா. சபை தாமதமின்றித் திருப்பி அமைக்கப்படவேண்டியது அவசியமாகும். உலக சமாதானத்தைக் கொண்டுவர இந்நடவடிக்கை தேவையானதும் அத்தியாவசியமானதுமாகும். உலக நிறுவனமான ஐ. நா. வை புனரமைப்புச் செய்ய சீனா தனது பூரண ஆதரவையளிக்கும்.

ஐ நா. வில் வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் ஏகபோக உரிமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இச்சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்துவ நாட்டுக்கும் அது என்ன அளவாயிருப்பினும் என்ன கொள்கையையுடையதாயிருப்பினும் சமமான வாக்குரிமையளிக்கப்படவேண்டும்.

ஆசியாவின் மண்டலச் சார்பற்ற நாடுகளின் தலைமைப் பீடத்தைப்பெற சீனா விரும்புகிறது என்பதை மேற்படி பத்திரிகையாளர் குழு கருத்துத்தெரிவித்துள்ளது.

## செவ்வாய்க் கிரகத்துக்கு சோவியத் கலம்

மாஸ்கோ, மே 20

செவ்வாய்க்கிரகத்தை நோக்கி சோவியத் விஞ்ஞானிகள் ஆளில்லா கலம் ஒன்றை அனுப்பியிருக்கின்றனர்

கிரகங்களுக் கிடையிலான விண்வெளி நிலையம் என்று வர்ணிக்கப்படும் இக்கலம் நேற்றிரவு இந்திய நேரப்படி 9-55 க்கு விண்வெளிக்குச் செலுத்தப்பட்டதாம்

இக்கலம் ஆறு மாதங்களில் செவ்வாய்க்கிரகத்தின் அருகில் செல்லும்

இதனைத்துக்கு மாஸ்-2 எனப் பெயரிடப்பட்டுள்ளது. மாஸ்-1 என்ற கலம் 1962-ம் ஆண்டு செலுத்தப்பட்டது. ஆனால் செவ்வாய்க் கிரகத்தின் அருகில் செல்ல இன்னும் ஒரு மாதம் இருக்கையில் அக்கலத்துடனான தொடர்புகள் அற்றுப்போய் விட்டன

இப்பொழுது செலுத்தப்பட்டுள்ள மாஸ்-2 எடையில் முன்னர் செலுத்தப்பட்டதைவிட பன்மடங்கு கூடுதலான பாரமுடையது. அதைவிட 5 மடங்கு பருமனுடையது

—...

### பொலிசில் புகார்

குருநகர். வியாழன்

இளம்பெண் ஒருவரை விவாகம் செய்வதாக வாக்குறுதி அளித்ததாகக் கூறப்படும் ஒரு வாலிபர், பிரஸ்தாப பெண் கர்ப்பவதியானதும் அந்தப்பெண்ணை கைவிட்டுவிட்டதாக வடபகுதி பொலிஸதிபரிடமும் தீவுப்பகுதி காரியாதிகாரியிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது. மண்டைதீவில் இச்சம்பவம் நடந்தது.

## ஏழை அழுத கண்ணீர்..

### வாரியார் விளக்கம்

சென்னை, மே 20

ஏழை ஒருவன் கொடுமைப் படுத்தப்படும்போது அவன் விடும் கண்ணீர் கொடுமைப்படுத்தியவனையே கொடுமையாகத் தாக்கும் என்று திருமுருக கிருபானந்தவாரியார் புரசைவாக்கத்தில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தின்போது கூறினார். வாரியார் தமது இந்தக் கருத்தை மேலும் விளக்கிப் பேசுகையில் இராமகாதையிலிருந்து ஓர் உதாரணத்தை வெளியிட்டார்

சுக்கிரீவனுக்கு அவன் முடிசூட்டுவிழாவில் அரசநீதிகள் பற்றி இராமபிரான் உபதேசிக்கையில், தமது இளவயதில் தாம் மண்ணுருண்டைகளால் மந்தரையின் வளைந்த முதுகில் அடித்ததையும் அதன் விளைவாகத் தமக்கு ஏற்பட்ட பேரிடர்களையும் எடுத்துக் கூறியதை வாரியார் சுட்டிக்காட்டினார்.

ஒருவர் உயர்ந்த பதவி அடையும்போது தமது நடவடிக்கைகளிலும் சுற்றியுள்ளவர்களோடு பழகுவதிலும் மிக்க கவனமாக நடந்து கொள்ளவேண்டும் அதிகாரத்துடன் பொறுப்புக்களும் சேர்ந்தே வரும். ஒரு சிறந்த அதிகாரி தமக்குக் கீழ் பணியாற்றுபவர்களுடன் கண்ணியமாக நடந்துகொள்ளவேண்டும் கண்டிப்பாக இருந்தாலும் கண்ணியம் தவறக்கூடாது ஒரு ஊழியரின் பெயரைச் சொல்லி அழைக்காமலல்லாமல் தொழிலைச்சொல்லி அழைப்பது அழகல்ல என்று திரு வாரியார் சொன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் 3-ல் சனி பகவான் இடபராசியில் பிரவேசிக்கிறார்

# சனி மாற்றம் உலகுக்கு நன்மை

— ஆயர்பாடி சோதிடர் வே.த.மயில்வாகனம் —

கடந்த 69-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதிக்கு மேடராசிக்கு வந்த இவ்வாண்டு ஜூன் 3-ம் திகதி இடபராசிக்கு வருகிறார் சனிபகவான். மேடராசி சனிக்கு நீசவீடாக உள்ளது. இந்தராசி செவ்வாயின் வீடாகும். மேடராசியில் இருந்த சனிபகவான் இடபராசிக்கு வருவதுவெயிலில் இருந்து வருந்திய ஒருவன் நிழலுக்கு வந்தது போன்ற ஆறுதல் உலகுக்கு உண்டாகும். நற்பலன்கள் சனிபகவானால் உலகுக்கு உண்டாக இந்த மாற்றம் வருகிறது.

சனிபகவான் இடபராசிக்கு 9-ம் 10-ம் வீட்டிற்குரியவர் இவற்றுக்கு தர்ம கர்மம் என்ற யோகம் உள்ளது. தர்மஸ்தி 9-ம் வீடு, கர்மஸ்தி 10-ம் வீடு. தர்மம் புண்ணியமான செயல்கள் கர்மம் நீதி, ஒழுங்கு தெய்வபக்தி தானதருமங்கள். என்பவைகள் நல்லவையாகவிருக்கும். தலைவர்கள் சுயநலத்தை விலக்குவர். பாவ புண்ணியத்தை உணர்வர் சிவசருணியமும் சிவன்களின் மகிமைகளும் தோன்றும்.

குருமார்சாதுக்களின் நல்லுபதேசமும் பகுத்தறிவும் தலைவர்களுக்கு உண்டாகும். பாவபுண்ணியத்தை உணரச்செய்யும். பதவிமோகத்தின் கெடுதிகளையும் துன்பங்களையும் அனுபவத்தில் அறியச் செய்யும். எந்தவகத்திலும் தீமை செய்பவர்கள் தண்டனையடைவர். நன்மைபுரிவோர் புகழ்மதிப்புப்பெற்று ஜெயமடைவர். முன்னிருந்த பகை, விரோதம் அறியாமைகள் நீங்கி மனம் மாற்றமடையும். மலைகளில் வனங்களில் செல்வப்பொருட்கள் இரத்தினங்கள் மூலப்பொருட்கள் காணப்படும். இலங்கை இந்தியா போன்ற தேசங்களுக்குள் சமாதானம் செல்வாக்கு தானிய விளைச்சல் கறுப்புப் பொருள் இரும்பு றப்பர் உளுந்து பயறுஎள்ளு விளைவு அதிகரிக்கும். இயற்கையான மழை காற்று ஒத்துழைக்கும். இன்பமடைதிரும்.

1971 நவம்பர் டிசம்பர் 72 ஜனவரியில் இலங்கையில் தொழில் விருத்திகள் உண்டாகும்- பகைமைதீரும் பொதுசனங்கள் நன்மை பெற்று வாழ்வர். சமாதானம் சந்தோஷம் உண்டாம்.

## இராசிப்பலன்

இடபராசிக்கு சனி மாறுவதால் மீனராசிக்கு ஏழரைச்சனி முடிவடைந்து மீனராசிக்காரர் நன்மையான பலன்களைப்பெறுவர். கன்னிராசிக்குமேஷர்க்கு அட்டமச்சனி தீர்ந்து நற்பலன் உண்டாகும், தனுராசிக்கு ஆறும் வீட்டிற்கு சனிவருவது நன்மை, சுகம். கடகராசிக்கு 11ம் வீட்டிற்குச் சனிவருவது தனலாபம், செல்வம்.

சிங்கராசிக்கு பத்தில்சனி வருவது சமபலன். கும்பராசிக்கு நாலில் சனிவருவது இடமாற்றம் பிரயாணம் மகரராசிக்கு ஐந்தில் வருவது புத்திரபீடை, அரசபயம். துலாராசிக்கு அட்டமத்தில் சனிவருவது கிலேசம், கலகம், விருச்சிகராசிக்கு ஏழாம் வீட்டில்சனிவருவது குடும்பப்பிணி, நிம்மதிக்குறைவு மிதுனராசிக்கு ஏழரை தொடங்கும் இடபராசிக்கு ஏழரை நடுக்கூறும் மேட இராசிக்கு ஏழரைக் கடைக்கூறு.

இவைகளில் தோஷமுள்ள இராசிக்காரர் தெய்வ வழிபாடு தானதருமங்கள்செய்து சாந்திபெறவேண்டும்.

## வன்னியசிங்கம் சலனப்படம்

குருநகர், [illegible]

அமரர் கு. வன்னியசிங்கத்தின் வாழ்க்கைச் சரித்திரத்தையும் அரசியல் ஈடுபாடுகளையும் சித்தரிக்கும் சலனப் படமொன்றை அச்சுவேலியைச் சேர்ந்த ஒவியர் ஒருவர் தயாரித்துவருகிறார். அவ்வப்போது எடுக்கப்பட்ட புகைப்படக்கோர்வையைக்கொண்டு விளக்கவுரையுடன் இப்படம் தயாரிக்கப்படும். முதலாவது புகைப்படக் காமிரா இயக்கத்தை திரு வி நடேசலிங்கம் அச்சுவேலியில் ஆரம்பித்து வைத்தார். முதலாவது படப்பிடிப்பு வல்வெட்டித்துறை சிவன்கோவில் பகுதிகளிலும் இரண்டாவது படப்பிடிப்பு திருமலைப் பகுதிகளிலும் பிடிக்கப்படவிருக்கிறதாம்.


## அறிவித்தல்.

### சீமேந்து விநியோகம்

யாழ்ப்பாண மாவட்டம்

பாவனையாளர்களுக்குச் சீமேந்து விநியோகம் செய்வதற்கென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதியளவு சீமேந்து வழங்கப்பட்டு வருகிறது. சீமேந்து தேவைப்படுவோர் பிரிவுக் காரியாதிகாரியின்(D.R.O.)சிபாரிசுடன் அண்மையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தங்கள் தேவைகளைப் பெறுமாறு வேண்டப்படுகின்றனர். 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் இந்த ஒழுங்கு நடைமுறையிலிருக்கும்.

ஆனி முதலாம் திகதி தொடக்கம் 25 பைகளுக்கு மேல் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் கிடைக்கும் ஓர் விண்ணப்பப் பத்திரத்தில், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக் கொள்ளலாம். 25 பைகள் வரை தேவைப்படுவோர் தொடர்ந்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பம்: ஏ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
18-5-1971.


தொழிற் சங்கங்களில்

# வெளியார் தலையீட்டுக்கு முற்றுப் புள்ளி?

கோட்டை, வியாழன்

தொழிற்சங்கங்களில் 'வெளி' நபர்களின் தலையீட்டைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்துக்கு உயர்மட்டக் குழுவொன்று சிபாரிசுகளைச் செய்துள்ளது.

அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் கண்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவது சம்பந்தமாகத் தமக்கு ஆலோசனை கூறுவதற்கு தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழு தொழிற்சங்கங்களை அரசியல்வாதிகள் உட்பட வேறு வெளிநபர்களின் தலையீட்டிலிருந்து விடுவிக்கும் விதத்தில் சிபாரிசுகளைச் செய்திருக்கின்றது.

இப்போதுள்ள நிலையில் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளில் 50 வீதமானோர் வெளி ஆட்களாக விருக்கின்றனர். இதை 25 வீதமாகவேனும் குறைக்கவேண்டும் என்று குழு சிபார்சு செய்திருக்கின்றது. இதனையும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் மறுபரிசீலனை செய்து வெளியார் தலையீட்டை முற்றாகவே தடுத்துவிடவேண்டும் என்று குழு தெரிவித்துள்ளது.

முன்னாள் தொழில் கமிஷனர் திரு. எம். ராஜநாயகம் தலைமையில் நியமிக்கப்பட்ட 12 பேர் கொண்ட இந்தக் குழு பின்வரும் சிபார்சுகளையும் தெரிவித்துள்ளது.

0 ஒரு தொழிலாளி அல்லது முதலாளி ஒரே சமயத்தில் ஒரு தொழிற்சங்கத்துக்கு மேல் உறுப்பினராக இருக்கலாகாது.

0 ஒரு ஸ்தாபனத்தின் ஊழியர் ஒருவர் ஒரு தொழிற்சங்கத்தின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் முழுத்தொழிற் சங்க வேலைகளைக் கவனிக்கும் விதத்தில் ஓர் ஆண்டுக்கு வேலைகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

0 தொழிற்சங்கத்தின் நிர்வாகிகள் தொழில் இலாகாவில் நடைபெறும் மாநாடுகள், விசாரணைகள் சமாசப் பேச்சுக்கள் முதலியவற்றில் கலந்துகொள்ள சம்பளத்துடன் விடுமுறை வழங்கப்படவேண்டும்

0 குற்றச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட எவரும் எந்தத் தொழிற்சங்கத்திலும் நிர்வாகம் வகிக்கமுடியாது.

0 பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு தொழிற்சங்கத்தினதும் தஸ்தாவேஜுகள், புத்தகங்களில் பொய்யான தகவல்களைப் பதிதல், அல்லது தொழிற்சங்கப் பதிவாளருக்கு பொய்யான தகவல் கொடுப்பது தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகும்.

0 இந்தக் குழுவில் திருவாளர்கள் ஏஸ். ஏ. மௌலானா, ஏ அஸீஸ், எல் டபிள்யு பண்டித, கே ஷின்யா, என் சத்தியேந்திர, ஜி வீரக்கொடி: சி குணசேகர, ஆர் திவாகரராஜா, எம் பி சி நலாங்கின், செனட்டர் டி ஜீ வில்லியம் ஆகியோர்களும் அங்கம் வகித்தனர்.

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 7ந்திகதி
21- 5- 71

மேடம்- ஒளிமயமான சூழ்நிலை உருவாகும், வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

ரிஷபம்- பொருமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

மிதுனம்- நல்லதைச்செய்வீர்கள். நலன் பெருகும். பிரமுகர்கள் உங்களைத்தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும்.

கடகம்- வாழ்க்கை புதிராகத் தோன்றும். ஆசாரக் குறைவுக்கும் இடமுண்டு. சகோதரி ஒருவரின் பிரச்னை மனத்திற்கு வேதனையைத் தரும்.

சிம்மம்- ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும். உணர்ச்சியைத் தூண்டும். எதிலும் விரக்திமனப்பான்மை தென்படும்.

கன்னி- தூரத்துப்பயணம் துன்பந்தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவுகளுக்குமிடமுண்டு.

துலாம்- வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. வெளியிடத் தொடர்புகளின் முன்னேற்றம் தென்படும். இன்று புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும்.

விருச்சிகம்- கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும்

தனுசு- கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவுகிடைக்கும். மன[illegible]ள்ள சந்திப்பு இன்று நிகழும் பொன்னாள்.

மகரம்- மணவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும்.

கும்பம்- குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக்கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

மீனம்- கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமேற்படும். உடல் நலமும் சிறிது பாதிக்கப் படலாம். குடும்பத்தில் சிறு பூசல் தோன்றிமறையும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆழ்கடலிலிருந்தே டெலிபோன் பேசவசதி

கோட்டை, வியாழன்

ஆழ்கடலில் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கும் போது கப்பல்களிலிருந்து கொண்டே நாட்டில் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தபால் தந்தி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

ஜப்பானிலிருந்து ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ள இதுசம்பந்தமான உபகரணங்களை விரைவில் இதற்கு உபயோகப்படுத்தவிருப்பதாகவும். அதிகாலமாக இது வீணாக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தத்தொலைபேசி மூலம் ஆழ்கடலில் 800 மைல்களுக்கப்பால் இருந்துகொண்டு உள்நாட்டுடன் தொடர்பு கொள்ளலாம் இந்தவசதி முன்னர் இருக்கவில்லை என்றும், பிரயாணிகள் கரை சேர்ந்த பின்னரோ அல்லது விமானத்தபால் மூலமோதான் உள்நாட்டிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியதாகவிருந்தது. என்றும் கூறப்பட்டது.

இந்த டெலிபோன்சேவை அமுலுக்கு வந்ததும் ரூபா 30 உடன் உள்நாட்டுடன் நேரில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படும் என்றும் தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கூறினார்.

## "ஆத்ம சாந்திக்கு சக்தி வழிபாடு"

யாழ்ப்பாணம், வெள்ளி

"சக்தி வழிபாட்டின் மூலமே உண்மையான ஆத்ம சாந்தி பெற முடியும்" மீசாலை தெற்கு மாரியம்மன் கோவிலில் கடந்த திங்களன்று நடந்த வார விழாவில் பேசிய சுவாமி மா. தில்லைநடராஜா தெரிவித்தார்.

இவ்வாலயத்தில் பிரதி திங்கட்கிழமைதோறும வாரவிழாநடை பெற்று வருகிறது. (கு வி ம)

## குடிபெயர்கின்றனர்

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி அம்பலன் வெளியில் கடல் தொழிலாளர்களுக்காக அரசாங்கத்தால் நிறுவப்பட்டிருக்கும் வீடமைப்புத் திட்டத்தில் வாழும் பல குடும்பங்கள் தண்ணீர்க்கஷ்டம் காரணமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

இவ்வீடமைப்புத் திட்டத்திலுள்ள 10 வீடுகளில் 6 வீடுகளிலிருந்த மீனவக் குடும்பங்கள் தமது வீடுகளைக் காலிசெய்துள்ளன. இம் மீனவக்குடும்பங்கள் மழைகாலத்தில் பெரும் வெள்ள அபாயத்தை எதிர் நோக்கவேண்டியிருப்பதால் மாரிகாலத்திலும் முற்றாகவே குடிபெயரவேண்டிய நிலையிலுள்ளனர்.

## பழைய இடத்துக்கு மீண்டும் சென்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சித்திரைப் புதுவருடத்துடன் பொலநறுவைப் பகுதியிலிருந்து வடமாகாணத்துக்கு மாற்றலாகி வந்திருந்த 70 நில அளவை உத்தியோகஸ்தர்களும் அவர்களுடன் சேர்ந்த மற்றும் 20 ஊழியர்களும் மீண்டும் பொலநறுவைப் பகுதியில் கடமையாற்றச் சென்றுள்ளனர்.

(கு.வி.ம.)

## ஒருநாள் சம்பளம் வழங்கினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

வரணி மகாவித்தியாலய ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை, பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட பொலிஸ், இராணுவ நிவாரணநிதிக்கு வழங்கினார்கள். ஆசிரியர்களின் ஒரு நாள் சம்பளமான 287 ரூபா- 50 சதத்தை வித்தியாலய அதிபர் திரு சிவப்பிரகாசம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசிய ரப்பரை சீனு இறக்குமதி செய்ய எடுத்தமுடிவு.

# இலங்கைக்குலாபகரமான மாற்றத்தையே தருமாம்

கோட்டை, வியாழன்

மலேசிய ரப்பரை சீனு இறக்குமதிசெய்ய எடுத்திருக்கும் முடிவினுல் இலங்கை ரப்பருக்கு சாதகமானதொரு மாற்றம் ஏற்படும் என்று இலங்கை அரசாங்க அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

ஆண்டுதோறும் மலேசியாவிடமிருந்து சீனு 150,000 தொன் வரையிலான ரப்பரை வாங்க முடிவுசெய்துள்ளதாக பீகிங் சென்று திரும்பிய மலேசிய வர்த்தகத் தூதுக்குழுத் தலைவர் திரு. தங்கு ரஷலி கோலாலம்பூரில் கூறியிருப்பது சம்பந்தமாக கருத்துத்தெரிவிக்கையிலேயே அந்த அதிகாரியான திரு எம். ஸி. ஸி. பெர்ஞண்டோ இப்படிக் கூறினுர்.

"தற்போது வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிடமிருந்து சீனு ரப்பரை இறக்குமதிசெய்கிறது என்று கூறிய திரு. தங்கு ரஷலி, இலங்கையுடனுன இந்த ஒப்பந்தம் திருத்தப்படுவதுபற்றி தமக்கு ஒன்றும் தெரியாது என்றும் அதுபற்றி சீனுவிடமே கேட்கவேண்டும் என்றும் கோலாலம்பூரில் கூறியிருக்கிருர். நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இப்படிச் சொன்னுர்.

மலேசிய ரப்பர் சபையிடம் உள்ள எல்லா ரப்பரையும் இறக்குமதிசெய்ய சீனு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 1,50,000 தொன் ரப்பரை இறக்குமதிசெய்யும்படி முதலில் சீனுவிடம் மலேசியா கேட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளையில் இலங்கை-சீன வர்த்தக ஒப்பந்தத்தின்படி 1971—1972-ம் ஆண்டுக்காலத்தில் சீனு 41,000 தொன் ரப்பரை இலங்கையிலிருந்து இறக்குமதிசெய்து 200,000 தொன் அரிசியை இலங்கைக்கு வழங்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'இந்திய அரசியல் திட்டம் சோஷலிஸத்துக்குத்தடை'

## இங்கு அது பொருந்தாது என்கிருர் டாக்டர் கொல்வின்

கொழும்பு, வியாழன்

'இந்தியாவின் அரசியல் திட்டம் சமூகத்துறையினருக்கே தகுந்ததாகும். இந்த அரசியல் திட்டம் மக்கள் சோஷலிசரீதியில் முன்னேறுவதற்கு முட்டுக்கட்டையாகவிருக்கிறது

அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியலமைப்பு சபைக்கூட்டத்தில் முன்னர் இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தைப் பின்பற்றி புதிய அரசியல்திட்டத்தை உருவாக்கவேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தவர்களுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் இந்திய அரசியல் திட்டத்தில் போன்று இவ்வரசியல் திட்டத்திலும் சிறுபான்மையினரின்உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் திட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவை ஆட்சிமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கூட மாற்ற இயலாது என்பதை சுப்பிரீம் கோர்ட்டின் சமீபத்திய தீர்ப்பே எடுத்துக்காட்டியுள்ளது. கோர்ட்டின் தீர்ப்பினுல் கஷ்டமேற்படுமெனின் புதிய அரசியல் நிர்ணயசபை அக்கஷ்டங்களுக்கு தீர்வுகாணக்கூட வேண்டியேற்படும். இந்த நிலைமை வசதியானவர்களுக்கு வாய்ப்பாகவிருக்கிறது. ஆனுல் சாதாரண மனிதனின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இத்தகைய ஒரு கஷ்டமான நிலைமை நாம் அடையக்கூடாது. அரசியல் அமைப்புக்கான 5-வது அடிப்படைத் தீர்மானத்தைமேற்படி அமைச்சர் சமர்ப்பித்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு இந்திய அரசியல் திட்டத்தையும் அதை யாத்தவர்களையும் தாக்கிப்பேசினுர்.

சி. பி. ஒ.

வடபகுதி அசைஸ் விசாரணை:

# 'முதலாம் எதிரி திரும்பவும் தோட்டாபோட்டதைகாணவில்லை'

## பருத்தித்துறை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

'முதலாம் எதிரி செல்வரத்தினம் வெடித்த முதலாவது வெடி இரத்தினசிங்கத்தில் பட்டது. 1-ம் எதிரி திரும்பவும் துவக்கில் தோட்டா போட்டதை நான் காணவில்லை சம்பவம் நடந்த இடத்தில் வெற்றுத் தோட்டா ஒன்றை பொலிசார் கண்டெடுத்தார்கள். முதன்முதல் 1-ம் எதிரியைக் கண்டஇடத்திலிருந்து சிறிது தூரத்தில் அந்த வெற்றுத் தோட்டா கிடந்தது.'

பருத்தித்துறை கொலை வழக்கு விசாரணையின்போது ஜூரிசபை தலைவர் கேட்டகேள்விகளுக்கு பதிலளிக்கும்போது கந்தையா அழகையா மேற்கண்டவாறு தெரிவித்தார்

இவ்வழக்கு நேற்று எட்டாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதிபதி வின்சண்ட் தாமோதரம் முன்னிலையில்விசாரணை செய்யப்பட்டது

ஜூரிசபைத் தலைவர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கந்தையா அழகையா மேலும் கூறியதாவது இரத்தினசிங்கத்தின் செத்தவீடு 13-ம்திகதி நடந்தது செத்தவீட்டுக்கு நானும் இரத்தினம் கனராசாவும் குலேந்திரலிங்கமும் போனேம், செத்தவீட்டில் நடந்தசம்பவம் பற்றி எங்களுக்குள் கதைக்கவில்லை.

நேற்று விசாரணை ஆரம்பமானதும் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே. ஏ. பி. செயிபிக் குறுக்கு விசாரணை செய்தார், அப்பொழுது கந்தையா அழகையா கூறியதாவது: 2-ம் எதிரி இராசதுரையைமுதல் தடவை கண்டபோது அவரைத்தை நிலத்தில் நின்ருர். காலடிப் பாதையில் பற்றையைத் தாண்டிப் போகும்போது சத்தம்கேட்டபின்பு தான் அந்தப்பக்கம் பார்த்தேன், சத்தம்வைத்திருக்காவிட்டால் அவரைப் பார்த்திருக்க மாட்டேன்,

3-ம் எதிரி ஆனந்தன் இரத்தினசிங்கத்தை வாளால் முதுகில் வெட்டினுர், தலையில் வெட்டுவிழவில்லை-

வழ: கீழ்க்கோர்ட்டில் 3ம் எதிரி வாளால் இரத்தினசிங்கத்தின் தலைப்பிற்பக்கத்தில் வெட்டினுர் என்றீரா?- தலையின் பின்பக்கம் முதுகில் என்றேன்.

வழ: 2-ம் எதிரி வாருங்கள் சுடு என்றதும்நீர் ஓடி ஒழித்தீரா?- இல்லை

வழ: 2-ம் எதிரி சத்தம் வைத்திருந்தால் பற்றைக்குள் ஓடி ஒழித்திருப்பீர்?- நான் ஒழிக்கவுமில்லை ஓடவுமில்லை.

வழ: கந்தையாதேவராசா மண்வெட்டியை உயர்த்திக்கொண்டுபோக 1-ம் எதிரி தவிர மற்ற எதிரிகள் வாருங்கடு என்ருர்களே?- ஆம்.

வழ: அப்போது ஒழிக்கப் பார்த்தீரா?- இல்லை.

வழ: எதிரிகள் சத்தம் வைக்கவில்லை; சத்தத்தை நீர் கேட்கவுமில்லை?- கேட்டனுன்.

வழ: அதனை மறுக்கமாட்டீர்?-ஆம்

வழ: மற்றும் இரண்டு பேர் எதிரிகளுடன் சேர்ந்து சத்தமிட்டார்கள்?- ஆம்.

வழ: ஸ்தலத்தில் மாஜிஸ்திரேட் முன்னிலையில் சாட்சியமளித்தீர்?- ஆம்.

வழ: 1-ம் எதிரியை தவிர மற்றும் எதிரிகள் சத்தமிட்டார்கள் என மாஜிஸ்திரேட்டிடம் கூறினீரா?- ஞாபகமில்லை.

வழ: வழக்கு ஆரம்பிக்கப்பட்டபின்னர் சட்டவிரோத குற்றச்சாட்டை நிறைவேற்றலாம் என்பதற்காக அப்படிச்சொன்னீரா?- நான் மறுக்கிறேன்.

வழ: நிற்குழுவைரவகோவிலையிட்டு ஒரு தகராறு இருந்ததா?- ஆம்.

வழ: தகராறுயாருக்கிடையில்?- இறந்தவருக்கும் எதிரிகளுக்குமிடையில்.

வழ: எதிரிகளுக்கும் உமக்குமிடையில் தகராறு இல்லை?- எதிரிகளுக்கும் எனக்குமிடையில் ஒருவிதமான கோபதாபமுமில்லை.

வழ: எதிரிகளில் யாராவது பயமுறுத்தவில்லையா?- எனக்கு தெரியாது.

வழ: நடக்காதபடியால் உமக்கு தெரியாது?- எனக்கு தெரிந்தவரை தெரியாது.

வழ: இச்சம்பவத்திற்கு உண்மையான காரணம் சிவபாக்கியம் மகேந்திரன் என்பவர் உடன் கூடிக் கொண்டு சென்றதுதான்?- நான் மறுக்கிறேன்.

விசாரணை இன்று காலைவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

# 'தரமான ஓதுவார்கள் யாழ்ப்பாணத்திலும் உளர்'

தாவடி, வியாழன்

"தமிழ் வேதம் எனப் போற்றப்படுகின்ற திருமுறைகளைப் பாடிப் பணிசெய்து திருமுறை நெறி நின்று ஒழுகிவரும் பலர் யாழ்ப்பாணத்திலும் இருக்கிருர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இவர்களும் தமிழக ஆதீனங்களிலே பயின்று அங்குள்ள பல ஓதுவார்களினதும், இசை மேதைகளினதும் முன் திருமுறைபாடிப் பாராட்டுக்களையும் பெற்றவர்கள் இவர்களையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலே திருமுறையைப் பரப்ப அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியது சைவநன் மக்களின்தலையாய கடனுகும்"

இராமநாதன் இசைக் கல்லூரி இசை ஆசிரியர் ஏ. ஜி. ஐயாக்கண்ணு சைவ மதஸ்தாபனங்களுக்கும் ரசிகர்களுக்கும் விடுத்துள்ள வேண்டுகோளொன்றில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவ்வேண்டுகோளில் அவர் மேலும் கூறியிருப்பதாவது: பொதுமக்கள்ரசிக்கவேண்டும் என்பதற்காக சினிமாப் பாடல்கள் போன்று. மெல்லிசையையும் சேர்த்துத்திருமுறையாகிய நல்லிசையைப்பாடாது பக்திச்சுவை சொட்டும் வண்ணமும், மனம் லயப்படும்வகையிலும் பொருள் விளக்கத்துடன் ரஞ்சகமாகப் பாடவேண்டும். இவ்வாறு பாடவல்ல தேவார பூஷணங்கள் தேவார ஓதுவார்கள் சங்கீத பூஷணங்கள் எல்லோரும்யாழ்ப்பாணத்தில் இருக்கிருர்கள் இவர்களையும் பயன்படுத்தி இசைவிழாக்களையும் திருமுறைகளையும்

# "'பிரஜை' என்னும் சொல்லை மாற்றுக'

## அஸீஸ் பிரேரணை நிராகரிப்பு

கொழும்பு, வியாழன்

'அடிப்படை உரிமைகள் பற்றிய அரசியல் திட்டத்தின் 5-வது அடிப்படைத் தீர்மானத்தில் அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா உபயோகித்துள்ள 'பிரஜை' என்னும் சொல் இந்திய வம்சாவழியினரான இலங்கைப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கவில்லை'

அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் 5-வது அடிப்படைத் தீர்மானத்திற்குத் திருத்தப் பிரேரணை கொண்டுவந்து பேசிய ஜனுப் அஸீஸ் மேற்கண்டவாறு கூறினுர்.

'இத்தீர்மானத்தில் பல இடங்களில் பிரஜைகள் என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதாகவும் இதை 'ஆட்கள்' என மாற்றியமைக்கவேண்டும் எனவும் ஜனுப் அஸீஸ் மேலும் கூறினுர்.

ஜனுப் அஸீஸ் திருத்தப் பிரேரணையை எதிர்த்துப் பேசிய அரசியல் திட்ட அமைச்சர் 'நாட்டின் சகல நபர்களுக்கும் அளிக்கப்படும் மனித உரிமைகள் நாட்டின் பிரஜைகளுக்கு மட்டும் அளிக்கப்படும் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை வேறுபடுத்தி அறிவதற்காகவே இச்சொல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

அஸீஸ் கொண்டுவந்த இத்திருத்தப் பிரேரணை தோல்வியடைந்தது.

—

## அமைச்சர் சம்மதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். விளையாட்டு அரங்கைக் கட்டிமுடிப்பதற்கு நிதியுதவியளிக்க விளையாட்டமைச்சர் திரு. இரத்தினுயக்கா சம்மதித்திருப்பதாக யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

யாழ விளையாட்டு அரங்கு சுற்றுமதில் தற்பொழுது கட்டப்பட்டு வருகிறது. இதனைப் பூரணமாகக் கட்டிமுடிப்பதற்கு யாழ். மேயர் விளையாட்டுத்துறை அமைச்சரின் உதவியைக் கோரியிருந்தார்.

இவ்வருட இறுதிக்குள் விளையாட்டு அரங்கு வேலைகள் முடிவடைந்துவிடுமென்றும் மேயர் தெரிவித்தார்.

## ரயில் சேவையில் மாற்றம்

கோட்டை, வியா.

தரான ரயில்சேவைகளில் இம்மாதம் 21ந் திகதி முதல் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து காலை 7-45 மணிக்கு காங்கேசன்துறைக்கு ரயில் புறப்பட்டு மாலை 6-47க்கு காங்கேசன்துறையை வந்தடையும். (தற்போது காங்கேசன்துறையிலிருந்து கோட்டைக்குச் செல்லும் ரயில் சேவை நேரத்தில் எதுவித மாற்றமுமில்லை)

கோட்டையிலிருந்து காலை 6-35 மணிக்கு கண்டி ரயில் வண்டி புறப்பட்டு 9 52மணிக்கு கண்டியைச் சென்றடையும். கோட்டையிலிருந்து பதுளைக்கு காலை 8-30க்கு ரயில் புறப்பட்டு மாலை5 40க்கு பதுளையைச் சென்றடையும். பதுளையிலிருந்து காலை 6-35க்கு கோட்டைக்குபுறப்படும் ரயில் மாலை 4-10க்கு கோட்டையை வந்தடையும்.

—

## ஒருநாள் சம்பளம் நிதிஉதவி

யாழ்ப்பாணம், வெள்ளி

பயங்கரவாதிகளினுல் பாதிக்கப்பட்ட பொலிஸ் இராணுவ நிவாரண நிதிக்கு தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் ஒருநாள்சம்பளத்தை வழங்க முடிவுசெய்துள்ளது.

தலைவர் திரு. பொ. தேவராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டதாக பொதுச் செயலாளர் திரு. ஆ. செந்தில்நாயகம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

படிப்பானது அறிவு தரவேண்டிய அளவே தரும். படித்தவற்றைச் சிந்திப்பதாலேயே படித்தவற்றை நமக்குச் சொந்தமாக்கும் — லாக்

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் வைகாசி மாதம் 7-ந் திகதி (21-5-71)


## பல்கலைக்கழகங்களின் சீரமைப்பு

ஒளிமிகுந்த எதிர்காலத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாகப் பல்கலைக்கழகங்களை அவசரமாகச் சீரமைப்பதற்கான சிபார்சுகளை ஆராய்ந்து தெரிவிப்பதற்கென மீண்டும் ஓர் ஏழு உறுப்பினர் குழுவொன்றை கல்வி அமைச்சர் நியமித்திருக்கிறார். பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வித்துறையைச் சீரமைப்பதற்கென இதற்கு முன் நியமிக்கப்பட்ட குழுக்களும் கமிஷன்களும் உருப்படியாக என்ன செய்தன என்ற கேள்வியுடன் இந்தக்குழு பற்றியும் ஐயம்கொள்வதற்கு இடமுண்டெனினும் நாட்டின் இன்றைய நிலையைக் கொண்டு இந்தக்குழுவாவது உருப்படியான சில நல்ல காரியங்களைச் செய்யுமென நம்பலாம்.

இந்தக்குழுவை எதிர்நோக்கும் சில அவசரக் கடமைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும். சமீபகாலங்களில் பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை மாணவர் பகிஷ்கரித்தது, பொலிசாருடன் அவர்கள் மோதிக்கொண்ட வன்முறைச் சம்பவங்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் ஆகியோருடன் முன்னெப்போதுமில்லாதவாறு மாணவர்கள் நடந்துகொண்டவிதம், பல்கலைக்கழகக்கட்டிடங்கள் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் ஆகிய பல்கலைக்கழக வாழ்க்கைமுறையையே மோசமடையச் செய்த இன்னோரன்னபிற சம்பவங்கள்பற்றி இந்தக் குழுவுக்குத் தெரியாமலிருக்க முடியாது. இந்த நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் இலங்கைக்கு மட்டும்தான் உரியவையென்றோ வேறுநாடுகளில் நடைபெறாதவையென்றோ யாரும் சொல்லத் துணியமாட்டார்கள். ஆனாலும் நாட்டின் அடித்தளத்தையே உலுப்பியிருக்கின்ற இன்றைய நெருக்கடியான நிகழ்ச்சிகளில் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழகக் கட்டிடங்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் தகவல்கள் (அவை எந்த அளவுக்கு உண்மை என்பது நமக்குத் தெரியாது) நாட்டை ஓரளவுக்கு அதிர்ச்சியிலாழ்த்தியிருக்கிறது. இந்த விஷயம் குறித்து ஆராய்ந்து பரிகாரம் தேடவேண்டியதாகும்.

இதுபோன்ற அருவருப்பான அபிப்பிராயங்களுக்கும் தேசவிரோத நடவடிக்கைகளுக்கும் பல்வேறு காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. எதிர்காலம்பற்றிய நிச்சயமின்மை இளம் உள்ளங்களில் விரக்தியையும் பொறுப்பின்மையையும் ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றன. திருப்தியற்ற பாடபோதனாமுறை பழக்கப்படுத்தப்பட்டதற்கும், படிப்பதற்கும் சிறிதுகூட வசதியில்லாமை, ஆசிரியர் மாணவர்களுக்கிடையில் நல்ல நெருங்கியதொடர்பில்லாமை, ஆசிரியர் பலருக்கு தகுந்த புலமையின்மை, மாணவர் பிரச்னைகள் பற்றி ஆசிரியர்கள் நன்கு அறிந்துகொள்ளாமை ஆகியவை தவிர ஆசிரியர் மத்தியில் நிலவும் அரசியல் கொள்கைகளும் கோட்பாடுகளும் கூட இவற்றுக்குக்காரணமாக அமைந்துள்ளன வென்று சொல்லலாம்.

இவைகளைவிட மிக மோசமானது என்னவென்றால் அரசியல் அதிகாரத்தையே பலாத்கார வழிமுறைகளால் கைப்பற்றுவதற்கு எத்தனிக்கும் ஆசைகொண்ட அரசியல் கட்சிகளும் ஸ்தாபனங்களும் பல்கலைக்கழகங்களினுள் தலைநீட்ட வழி கிடைத்ததாகும். பல்கலைக்கழகத்துக்கு வெளியே நாட்டின் பொறுப்பு வாய்ந்தவர்கள் பெரியோர்கள் மத்தியில் பொறுப்பின்மையும் தேசப்பற்றின்மையும் ஒழுங்குகட்டுப்பாடு ஆகியவையும் அருகிவந்துள்ளது பல்கலைக்கழகங்களில் நிலைமை மோசமடைந்ததற்கு மற்றொரு காரணமென்பது உணர முடியாததல்ல.

நாட்டின் எதிர்காலத்துக்கே சவால்விடக்கூடிய அளவுக்கும், நாடுதாங்க முடியாத அளவுக்கும் நிலைமை மோசமடைந்து வருவதையிட்டு யாரும் கவலை கொள்ளாமலிருக்க முடியாது.

சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள தீங்குகள்பற்றியும் அவற்றுக்கான காரணங்கள் பற்றியும் இந்த விசாரணைக் குழு பக்கம் பக்கமாக தனது அறிக்கையில் இதற்கு முன்னைய குழுக்கள், கமிஷன்கள் போலவே எழுதி நிரப்பக் கூடும். இதனால் தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கலாமே தவிர பிரச்னைகளுக்குத் தீர்வுகாணமுடியாது. பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான வழிமுறைகளையும் அதற்கென மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி, தீவிரமான யோசனைகளையும் இக்குழு தெரிவித்தாலே பயனுண்டு. ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், அரசாங்கம் மற்றும் அரசியல்வாதிகள் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் பொறுப்பை உணர்ந்து நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளான இன்றைய இளம் சந்ததியினருக்கு வழிகாட்டக்கூடிய நல்ல ஒழுக்கத்தையும் பண்பையும் நாகரிகத்தையும் தவறாது செயல்படுத்த முன்வருவதில்தான் யாவும் தங்கியிருக்கிறது.

சமுதாயத்தின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதற்குப் பல்கலைக்கழகங்கள் பயன்படவேண்டுமே தவிர சதிக்கூடமாக அவை விளங்கக்கூடாது.

## 22-ம் திகதி அரசு பொறுப்பேற்கும்

உடுப்பிட்டி, வியா

அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு வரும் கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜமும் அடுத்த மாதம் 22-ம் திகதி அரசாங்கத்தால் பொறுப்பேற்கப் படவுள்ளது.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் கட்டுப்பாட்டில் 48 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் தொகை குறைக்கப்பட்டுப் பல கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்படவிருக்கின்றன. தற்போது இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பௌதிகம், உயிரியல்

## போதனாமுறை நூல்வெளியிட முடிவு

பருத்தித்துறை, வியா

க. பொ. த. (சாதாரண) வகுப்பிற்கான பௌதிகம், உயிரியல் ஆகிய பாடங்கள் பற்றிய மதிப்பீட்டு வகுப்புகள் கடந்த மாதமும், இம்மாதமும் தொடர்ந்து ஆறு நாட்கள் வரை நடைபெற்றன. மேற்படி பாடங்களைப் போதிக்கும் வடபகுதி ஆசிரியர்கள் கலந்து கொண்ட இவ்வகுப்புகளில் இப்பாடங்கள் பற்றிய விவாதங்கள் நடந்ததுடன் இப்பாடங்களில் சேர்க்க வேண்டிய புதிய அம்சங்கள் பற்றியும் போதனா முறைகள் பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கும் ஒரு நூலொன்று வெளியிடப்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வகுப்புகளை வடபகுதி விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எம். அற்புதநாதன் ஒழுங்கு செய்திருந்தார்.

## நாட்டின் நலன்கருதி விசேஷ பஜனை

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்பொழுது உள்ள இடர் நீங்கவும் நாட்டின் நலன் கருதியும் சென்ற வாரம் முதலாக நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து தினந்தோறும், பல அடியார்கள் ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நல்லைக்கந்தன் வீதிவழியாக ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய கோளறுபதிகம், இடர்களை பதிகம் ஆகியவற்றைப்பாடி வலம் வருகின்றனர்.

காலை 6-30 மணிக்கு பஜனை ஆரம்பமாகி 7-30 மணிக்கு முடிவுபெறும் இப்பஜனை ஒரு மண்டலம் நடைபெறும். இப்பஜனைப் பாடல்கள் அடங்கிய தொகுப்பு இன்று மக்களுக்கு இலவச வெளியீடாக வழங்கப்படும்.

## கரபந்தாட்டம்

சாவடி, வியாழன்

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்திற்கும் கொக்குவில் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வ கரபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் கழகம் 2-0 ஆட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. சின்னராசா மத்தியஸ்தம் வகித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு [illegible] மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஏழுமலையானுக்கு 180 மூடை பணம்!

## இருமாதங்களில் கிடைத்த காணிக்கை

திருப்பதி, மே, 20

திருப்பதி ஏழுமலையானுக்குக் கிடைத்த ரூபாய் நாணயங்கள் எண்ணப்படாமல் 180 மூடைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

தினமும் திருப்பதி ஏழுமலையானுக்கு கிடைக்கும் உண்டியல்பணம் எண்ணிக் கணக்கிடப்படுவது வழக்கம். கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பக்தர்கள் தொகை அதிகரித்ததையால் உண்டியல் பணத்தில் ரூபாய்நோட்டுக்கள் மாத்திரம் எண்ணப்பட்டு நாணயங்கள் மூட்டை கட்டி வைக்கப்பட்டுள்ளன என ஆலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த 180 மூடைகளில் உள்ள பணமும் பல லட்சம் ரூபாவாகவிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. உண்டியல் வருமானம் குறையும்போது இம்மூடைகள் எண்ணப்படும் என மேற்படி அதிகாரி தெரிவித்துள்ளார்.

# முஜிபுர் ரஹ்மான் உருவம் பொறித்த நாணயம்

## புதிய அரசு வெளியிடும்

புதுடில்லி, மே 20

ஷேக் முஜிபுர் ரஹ்மான் உருவத்துடன் ரூபாய் நோட்டுகளை வெளியிடப் போவதாக வங்காள தேச அரசாங்கம் அறிவித்து உள்ளது.

ரஹ்மான் ஆதரவாளர்கள் புரட்சி அரசாங்கம் அமைத்திருப்பது தெரிந்ததே. வங்காள தேசத்தில் 65 கிராமங்கள் இவர்களது நிர்வாகத்தில் உள்ளனவாம்.

புதிதாக ரூபாய் நோட்டுக்களும் தபால்தலைகளும் வெளியிடப் போவதாக வங்காளதேச அரசாங்கம் அறிவித்துள்ளது. புதிதாக வெளியிடப்படும் நோட்டுக்களில் ரஹ்மான் உருவம் பொறிக்கப்படவிருக்கிறது. தற்போதுள்ள பாகிஸ்தான் ரூபாய் நோட்டுக்களையும் தபால்தலைகளையும் பயன்படுத்த வேண்டாம் என்று வங்காளதேச அரசாங்கம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாதிகளை பிடிப்பதில்

## தொண்டர்களும் கிராமசேவகர்களும்

கண்டி, வியா

கண்டி மாவட்டத்திலுள்ள கிராமசேவகர்களும், தொண்டர்களும் பயங்கரவாதிகளைக்கண்டுபிடிப்பதற்குப் பொலிசாருக்கு பெரிதும் உதவிவருகின்றனர்.

கண்டி உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பீற்றர் குணவர்த்தனா அப்பகுதியிலுள்ள கிராமசேவகர்களையும் தொண்டர்களையும் பொலிசாருடன் அனுப்பி பயங்கரவாதிகளைப் பிடித்துள்ளார். இத்தொண்டர்களைத் திரு. குணவர்த்தனா பயங்கரவாதிகளால் பழிவாங்கப்படாது இருப்பதற்காக வெவ்வேறு கிராமங்களில் பயங்கரவாதிகளைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தினார் எனத் தெரியவருகிறது.

இந்த முறையினால் கண்டி பொலிஸ் நிலையத்தைத்தாக்கிய பயங்கரவாதிகள் பலர் சுலபமாகப் பிடிபட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

## இருமாதங்களில் 16 லட்சம் ரூபா லாபம்

கோட்டை, வியாழன்

அரசாங்க தனிப்பொருள் கூட்டுஸ்தாபனத்திற்கு கடந்த இருமாதங்களில் இடலைட் ஏற்றுமதியால் 16 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயமாற்றுக் கிடைத்துள்ளது.

இவ்விரு மாதங்களிலும் 84000 தொன் இல்மனைட்டை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் 7.400 தொன்னும், ஏப்ரல் மாதத்தில் 24000 தொன் இல்மனைட்டும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக கனிப்பொருள் கூட்டுஸ்தாபனம் அறிவித்துள்ளது. யப்பானே இலங்கையின் இல்மனைட்டை வாங்கும் பிரதான நாடாகும்

உற்சவம்

ஊர்காவற்றுறை, வியா.

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் வருகிறமாதம் 11-ம் திகதி ஆரம்பமாகிறது. 19-ம் திகதி இரதோற்சவம் நிகழும்.

## "கல்விவளவுக்கு விளையாட்டு முக்கியம்"

உடுப்பிட்டி, வியாழன்

"மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டுக் கழகங்கள் மூலமே இத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற முடியும். எமக்கிடையே போட்டி மனப்பான்மையை யொழித்துச் சிநேகிதத் தன்மையுடன் வாழப் பழக வேண்டும்".

மேற்கண்டவாறு கரணவாய் தெற்கு யுரேனஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டத்தில்பேசுகையில் திரு. க. சண்முகசுந்தரம் குறிப்பிட்டார். பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு. க சண்முகசுந்தரம், தலைவர் திரு. பொ. குமாரசாமி, உபதலைவர் திரு. எஸ். மகேந்திரன், காரியதரிசி திரு. குலேந்திரன், உபகாரியதரிசி திரு. கே. கணபதிப்பிள்ளை, தனாதிகாரி திரு. கே. குலசோதி, பொருப்பாளர் திரு. பா. தங்கராசா.

## வெங்காயம்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காலத்துக்குத்தான் நீடிக்கும் ஆகையால் இப்பகுதியில் இவர்கள் நஷ்டமடையாமல் இருக்கவெங்காயங்கொண்டு செல்வதற்கான தடையை நீக்கவேண்டும்.

தபால் அமைச்சர் செனட்டர் குமாரசூரியர் இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், மாவட்ட இணைப்புக்குழுவின் கவனத்துக்கு இதுகொண்டு வரப்படும் என்றார்.

வடபகுதியில் மூடுவதென முடிவுசெய்யப்பட்ட மரக்காலைகளுக்கு இன்னுமொரு வருட கால அவகாசமளிப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் குமாரசூரியர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org